DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No.14/2024 |
| Deposition of witness | : | P.W. 1 |
| Name | : | இளையராஜா |
| Father's /Husband Name | : | பவுன்ராஜ் |
| Village | : | காவனூர் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 40 |
| Occupation | : | ஆட்டோ ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 25th day April 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பங்கள் என்னுடையதுதான். மேற்படி கையொப்பங்களை சுமார் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு நாள் குடவாசல் போலீசாரிடம் செய்து கொடுத்தேன். வழக்கு சம்மந்தமாக என்னை எதுவும் விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள என்னுடைய இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள என்னுடைய இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ் சாட்சியானதால் அவரை குறுக்கு விசாரணை செய்ய வேண்டி அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

ஆஜர் எதிரியை தெரியும் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தொடர்பாக 14.02.2021ம் தேதி காலை 06.00 மணியளவில் இவ்வழக்கின எதிரியான பரணிதரன் என்பவரை என் முன்னிலையில் குடவாசல் ஆய்வாளர் விசாரித்த போது

அவர் தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததை பதிவு செய்து என்னிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதேநாள் காலை 06.30 மணியளவில் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வழக்கின் தடயங்களை ஆய்வாளர் கைப்பற்றிய கைப்பற்றுதல் மகசர்களை நான் சாட்சியாக இருந்து சாட்சி கையொப்பம் செய்து விட்டு தற்போது வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்று ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு தொடர்பாக போலீசார் விசாரிக்க வாக்குமூலம் கொடுத்து விட்டு தற்போது போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை- இல்லை**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.04.25 17:30:12 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal